<u>09.04.2026</u>

<u>O.S.No.256/2011</u>

<u>பி.வா.சா.1.திரு.சிராஜீதின், த.பெ.திரு.முத்துமுகமது.</u>

<u>சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்</u>

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு விவரங்களை படித்து தெரிந்துக் கொண்டேன். இந்த வழக்கை தாக்கல் செய்யப்படும்போது இறந்துபோன எனது தகப்பனார் முத்துமுகமது மட்டுமே பிரதிவாதியாக காண்பிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது எனது தகப்பனார் இறந்துவிட்டபடியால் என்னையும் இதர வாரிசுகளையும் தரப்பினராக சேர்த்துள்ளனர் என்றால் ஆமாம். இந்த வழக்கில் எனது அப்பா எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தார் என்றாலும் நானும் இதர பிரதிவாதிகளும் தனியாக எதிர்வழக்குரை எதுவும் தனியாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) தாவா சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு அசல் வழக்கு எண்.1020/1980ன்படியும் நிறைவேற்றுதல் மனு எண்.255/1983ன்படி ஒப்படைப்பு செய்யப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தை எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் வழக்கு சொத்தை வாதிக்கும் அவரது சகோதரர் காதர் பிச்சை என்பவருக்கும் 14.02.1990 ல் ரூ.13800/–க்கு சுத்த கிரையமாக பேசி பணம் பெற்றுக் கொண்டு சுவாதீனத்தை அன்றையதினமே எனது தகப்பனார் ஒப்படைத்துவிட்டார் என்றால் இல்லை. மேற்படி சொத்தை எனது தகப்பனார்

ஒப்படைக்கவில்லை என்று தனிப்பட்ட முறையில் என்னிடம் ஆவணம் எதுவும் கொடுத்து நான் அதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அனைத்து ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் சுவாதீனத்தை ஒப்படத்ததை மறுத்து தனிப்பட்ட முறையில் நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. சொத்தின் வருவாய் துறை ஆவணங்களை மாற்றம் செய்ய எனது தகப்பனார் சம்மத கடிதம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை.

3) வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்று வாதி வழக்கில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அதை நான் மறுக்கிறேன். வாதியின் சகோதரர் காதர் பிச்சை 28.11.2005ல் இறந்துவிட்டதாக வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் கேள்விப்பட்டுள்ளேன். காதர் பிச்சை இறந்த பின்பு எனது தகப்பனாரும் வாதியும் 22.10.2008ல் மனிதாபிமான அடிப்படையில் சொத்திற்கு ரூ.5 லட்சம் கிரையம் பேசி அதற்கு அட்வான்ஸ் ரூ.3 லட்சம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு ஏற்கனவே செலுத்திய ரூ.13800/– கழித்தது போக மீதி தொகையான ரூ.286200/–ஐ வாதியிடமிருந்து எனது அப்பா சாட்சிகளின் முன்னிலையில் பெற்றுக் கொண்டு கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் நான் மறுக்கிறேன். அந்த ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணம் மோடியான ஆவணம் என்று எனது தகப்பனார் வாதியின் மீது சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்தாரா என்றால் இல்லை. இந்த வழக்கில் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

4) நானோ எனது உடன் பிறந்தவர்களோ வாதிக்கு எதிராக மோசடியான கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தினார் என்று சொல்வது

சம்மந்தமாக சட்ட நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. 19.09.2011ம் தேதி வாதி வழக்கிடை சொத்தில் மதியம் 2.00 மணியளவில் இருந்த சமயம் எனது தகப்பனார் அடியாட்களுடன் வந்து தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து தாவா சொத்தை கைப்பற்ற முயற்சி செய்தார் என்றால் மறுக்கிறேன். சட்டப்படியாகதான் வாதியிடம் இருந்து சுவாதீனம் பெற எனது தகப்பனார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும், நாங்களும் சுவாதீனம் கேட்டு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கிலும் எதிர்க்கோரிக்கை செய்யவில்லை என்றாலும் நான் மறுக்கிறேன். எங்கள் வசம்தான் அனுபவம் உள்ளது. அதற்கான ஆவணங்களும் தாக்கல் செய்துள்ளேன்.

5) 19.09.2011ம் தேதி எனது தகப்பனார் தாவா சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்ததால் கருப்பாயூரணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் நாங்கள் அத்துமீறி நுழையவில்லை. 19.09.2011ம் தேதி நான் கருப்பாயூரணி காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் கிரைய தொகையை வாங்கிக் கொண்டு தாவா சொத்தை வில்லங்கம் செய்ய முயற்சி செய்ததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

6) தாவா சொத்தின் பட்டா எண் என்ன என்றால் பழைய பட்டா எண்.70, புதிய பட்டா எண்.244 ஆகும். புதிய பட்டா 2015 மாறியது. அதாவது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்பு மாறியுள்ளது என்றால் ஆமாம்.

7) பி.வா.சா.ஆ.1 ஆவணமானது 13.04.2015ம் தேதி பெறப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தானது விளத்தூர் கிராமத்தில் உள்ளது என்றால் ஆமாம். சர்வே எண்.16/1B ஆகும். பி.வா.சா.ஆ.2

ஆவணத்தின்படி சர்வே எண்.16 என்று உள்ளது என்றால் ஆமாம். சர்வே எண்.16/1B என்பது 2015 ஆம் ஆண்டு மாற்றப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.3 இரண்டும் ஒரே ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 வரிசை வரி ரீதுகள் மற்றும் பி.வா.சா.ஆ.5 வரிசை வரி ரீதுகள் வழக்கு தாக்கல் செய்த ஆண்டான 2011ல் எனது பெயரிலோ எனது தகப்பனார் பெயரிலோ தாக்கல் செய்யவில்லை என்றால் ஆரம்பத்தில் இருந்தே வரி செலுத்திதான் வருகிறோம்.

8) பழைய பட்டா எண்.70, புதிய பட்டா எண்.244 ஆகிய இரண்டும் ஒன்று தான் என்பதற்கு வருவாய் துறை ஆவணங்கள் பெறப்பட்டு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வட்டாட்சியர்தான் அளவீடு செய்து கொடுத்துள்ளார். எந்த தேதியில் அளவீடு செய்து கொடுத்தார் என்பது சம்மந்தமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9) வாதிக்கு எனது தகப்பனார் கொடுத்த சொத்தையும் தகப்பனார் பெற்றுக் கொண்ட கிரைய தொகையும் கொடுக்காமல் மோசடி செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் இந்த வழக்கை எதிர்வாதம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வாதிக்கு கிரையம் கொடுத்த 1990ஆம் ஆண்டு முதல் நாளது தேதி வரை வழக்கு சொத்தானது வாதியின் அனுபவத்தில்தான் உள்ளது என்றாலும், வழக்கு சொத்து எந்த காலத்திலும் எங்கள் அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. வாதிக்கு நாங்கள் உறவினர்கள் என்றால் ஆமாம். நாங்கள் வாதியை மோசடி செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் தாவா இடத்தை அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்லுகிறோம் என்றால் சரியல்ல. எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.